திரு. இரா. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையினுடைய 48—வது வார்டில் கீழப்பெருமாள் திருவீதியிலுள்ள மாநகராட்சி இடத்தில் உள்ள ரேஷன் கடை கட்டடம் பழுதடைந்துள்ளது. அதற்குப் புதிய கட்டடம் கட்டித் தரப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி கேட்டவர் வரவில்லை. அதனால் இதற்குத்தான் நீங்கள் துணைக் கேள்வி கேட்க வேண்டும். ஏதாவது கேள்வி உண்டா இதற்கு? (குறுக்கீடு) இல்லையென்றால் உட்காருங்கள்.

வினா வரிசை எண் 106, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா வரிசை எண் 107, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. செழியன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

107—

புதிய கட்டடம்

***985—திரு. கோவி. செழியன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் வட்டத்தில் ஏற்கெனவே இயங்கி வரும் வட்டாட்சியர் அலுவலகத்தினை சரி செய்யத் தேவைப்படும் தொகையினை மதிப்பீடு செய்து உரிய செயற்குறிப்பினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கோரப்பட்டுள்ளது. அச்செயற்குறிப்பு கிடைத்தவுடன் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவைப் பெற்று முடிவெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவி. செழியன் இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

முற்பகல் 10—05

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி மேலூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகம் ஓட்டுக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டு வருகின்றது. நாடு சுதந்திரம் அடைந்ததிலிருந்து அந்தப் பழைய கட்டடத்தில் இயங்கி வருகின்றது. கேட்டதையும், கேட்காமலேயேயும் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் மேலூரில் இருக்கின்ற வட்டாட்சியர் அலுவலகத்தைப் புதிய கட்டடமாகக் கட்டித் தர முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேலூரில் உள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் பழைய ஓட்டுக் கட்டடமாக, மிகவும் பழமையான கட்டடமாக இருக்கிறது என்று சொல்கிறார். அதனை மாற்றி புதிய கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். இன்னும் 12 வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களிலும் மற்றும் பிற அரசு அலுவலகக் கட்டடங்களிலும் இயங்கிக் கொண்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதை, முன்னுரிமை அடிப்படையில் யாருக்கு முதலில் கொடுக்கப்படும் என்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. காமராஜ் அவர்கள்.

திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி,

திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூரைத் தனி தாலுகாவாக ஆக்குவதற்கான முன் முயற்சிகள் ஏதாவது இருக்கின்றனவா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி அலுவலகக் கட்டடம் கட்டுவது தொடர்பானது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வட்டாட்சியர் அலுவலகம் பிரிக்கப்படுமா என்று கேட்கின்றார். இருந்தாலும் அரசினுடைய சட்ட விதிகளுக்கு உட்பட்டிருந்தால் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, வருகின்ற நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

திரு. ம. முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற தாலுகா அலுவலகங்கள் எல்லாம் சொந்தக் கட்டடத்திற்கு வரும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். சொந்தக் கட்டடமான எனது தொகுதியில் உள்ள திருமங்கலம் தாலுகா அலுவலகம் நூறு ஆண்டுக்காலத்தைக் கடந்தது. அந்தச் சொந்தக் கட்டடம் பழமையானதாக இருக்கிற காரணத்தினால், புதியதாக சொந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். ஏற்கெனவே, வாடகைக் கட்டடத்தில் இயங்கிக் கொண்டிருக்கிற கட்டடங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, பின்னர் இது போன்ற பழைய கட்டடங்களையெல்லாம் பரிசீலித்து உடனடியாக முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எத்தனை வட்டாட்சியர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் அல்லது பழமையான கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன். அதோடு மட்டுமல்லாமல் சிவகங்கை வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆனால், மேற்படி கட்டடத்தை மிகவும் காலதாமதமாகக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதனை உடனடியாகக் கட்டி, விரைவில் திறப்பு விழா நடத்தப்படுமா என்பதையும் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதுபோல் பத்து கட்டடங்கள் வாடகைக் கட்டடங்களிலும், இரண்டு கட்டடங்கள் மற்ற துறையினுடைய கட்டடங்களிலும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. சிவகங்கையில் கட்டப்படும் கட்டடத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதனை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களிடம் சொல்லி வேகப்படுத்தி, உடனடியாக மக்கள் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

திரு. பி.வி. கதிரவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது உசிலம்பட்டியில் Main Road, National Highways–ல் வட்டாட்சியர் அலுவலகம் ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட அலுவலகமாக இருக்கிறது. அதற்குப் பக்கத்தில் Sub–Registrar அலுவலகம் மற்றும் காவல் நிலையமும் இருக்கின்றன. ஆனால், மொத்த அலுவலகங்களும் 25 சென்ட் நிலத்தில்தான் உள்ளன. இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் கொண்ட பகுதியில்,

வருங்காலத்தைக் கருத்தில் கொண்டு, வேறு இடத்தில் புதிய தாசில்தார் அலுவலகம் கட்டித் தர முடியுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் இருக்க இடம் இல்லாதவர்களுக்கு இடம் கொடுக்க வேண்டும். அதற்குப் பின்னால், இருப்பவர்களுக்குச் சௌகரியம் செய்து கொடுக்க வேண்டும். அதற்குப் பின்னால்தான் பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 108, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. கந்தன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

108—

சத்துணவுக் கூடம்

***784—திரு. கே.பி. கந்தன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழிங்கநல்லூர் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சி, கண்ணகி நகர் பகுதியில் சத்துணவுக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி செல்வி ராமஜெயம், சமூக நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) காஞ்சிபுரம் மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதி, ஒக்கியம் துரைப்பாக்கம் ஊராட்சி, கண்ணகி நகர் பகுதியிலுள்ள துவக்கப் பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்க ரூ.2.50 இலட்சம் மற்றும் அதே பகுதியில் அரசு உயர்நிலைப் பள்ளியில் சத்துணவுக் கூடம் அமைக்க ரூ.2.75 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.